# மே – 24 – வியாழன்

## கிறிஸ்தவர்களது சகாயியான மரியாள்

## மனிதர் தம் மேன்மையிலேயே நிலைத்திருக்க முடியாது": திபா. 49:20

### முதல் வாசகம் : யாக்கோபு 5 : 1 - 6

செல்வர்களே, சற்றுக்கேளுங்கள். உங்களுக்கு வரப்போகும் இழிநிலையை நினைத்து அலறி அழுங்கள். உங்கள் செல்வம் மக்கிப்போயிற்று. உங்கள் ஆடைகள் பூச்சிகளினால் அரிக்கப்பட்டுவிட்டன. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்துவிட்டன. அந்தத் துருவே உங்களுக்கு எதிர்ச்சான்றாக இருக்கும் அது நெருப்புப்போல உங்கள் சதையை அழித்துவிடும். இந்த இறுதிநாள்களில் செல்வத்தைக் குவித்து வைத்திருக்கின்றீர்களே! உங்கள் வயலில் அறுவடைசெய்த வேலையாள்களுக்குரிய கூலியைப் பிடித்துக்கொண்டீர்கள் அது கூக்குரலிடுகிறது. அறுவடை செய்தவர்களின் கூக்குரல் படைகளின் ஆண்டவருடைய செவிக்கு எட்டியுள்ளது. இவ்வுலகில் ஆடம்பரமாகவும் இன்பமாகவும் வாழ்ந்தீர்கள். கொல்லப்படும் நாளுக்காக உங்கள் உள்ளங்களைக் கொழுக்க வைத்தீர்கள். நேர்மையானவரைக் குற்றவாளி எனத்தீர்ப்பளித்துக் கொலை செய்தீர்கள். ஆனால் அவர் உங்களை எதிர்த்து நிற்கவில்லை.

**பதில்பாடல் :** ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்
ஏனெனில் விண்ணரசு அவர்களதே.

### நற்செய்தி : மாற்கு 9 : 41 - 50

அக்காலத்தில் இயேசு தம்சீடருக்குக் கூறியதாவது : நீங்கள் கிறிஸ்துவைச் சார்ந்தவர்கள் என்பதால் உங்களுக்கு ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப்பவர் கைம்மாறு பெறாமல் போகார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்."என்மீது நம்பிக்கை கொண்டுள்ள இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச் செய்வோருடைய கழுத்தில் ஓர் எந்திரக்கல்லைக்கட்டி, கடலில் தள்ளிவிடுவதே அவர்களுக்கு நல்லது.உங்கள் கை உங்களைப் பாவத்தில் விழச்செய்தால் அதை வெட்டிவிடுங்கள். நீங்கள் இரு கையுடையவராய் அணையாத நெருப்புள்ள நரகத்துக்குள் தள்ளப்படுவதைவிட, கை ஊனமுற்றவராய் நிலைவாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது.உங்கள் கால் உங்களைப் பாவத்தில் விழச்செய்தால் அதை வெட்டிவிடுங்கள்.நீங்கள் இரு காலுடையவராய் நரகத்தில் தள்ளப்படுவதைவிட கால் ஊனமுற்றவராய் வாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது.உங்கள் கண் உங்களைப் பாவத்தில் விழச்செய்தால், அதைப் பிடுங்கி எறிந்துவிடுங்கள். நீங்கள் இருகண்ணுடையவராய் நரகத்தில் தள்ளப்படுவதைவிட ஒற்றைக் கண்ணராய் இறையாட்சிக்கு உட்படுவது உங்களுக்கு நல்லது.நரகத்திலோ அவர்களைத் தின்னும் புழுசாகாது. நெருப்பும் அவியாது.ஏனெனில் பலிப்பொருள் உப்பால் தூய்மையாக்கப்படுவதுபோல் ஒவ்வொருவரும் நெருப்பால் தூய்மையாக்கப்படுவர்.உப்பு நல்லது. ஆனால் அது உவர்ப்பற்றுப்போனால் எதைக்கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்குவீர்கள்? நீங்கள் உப்பின் தன்மை கொண்டிருங்கள். ஒருவரோடு ஒருவர் அமைதியுடன் வாழுங்கள" என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் "உங்கள் கை உங்களை பாவத்தில் விழச்செய்தால் அதை வெட்டிவிடுங்கள். நீங்கள் இருகையுடையராய் அணையாத நெருப்புள்ள நரகத்துக்குள் தள்ளப்படுவதை விட கை ஊனமுற்றவராய் நிலைவாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது" (மாற் 9.43) பாவம் என்பது கடவுளின் விருப்பப்படி நாம் நடக்காமல் நம் சுயநலப் போக்கில் நடப்பதைக் குறிக்கும். ஒருவர் நல்வழியில் செல்லாமல் தவறான வழிகளில் சென்றால் அது ஏற்க தகாதது. ஆனால் பிறரையும் தவறான வழிகளில் நடக்க தூண்டுவது அதைவிடப் பெரிய குற்றமாக கருதப்படும். இயேசு இத்தகைய குற்றத்தைக் கடுமையாக கண்டித்துள்ளார். "பிறரை பாவத்தில் விழச் செய்வோருடைய கழுத்தில் ஒரு எந்திரக் கல்லை கட்டி கடலில் தள்ளிவிடுவதே அவர்களுக்கு நல்லது"(மாற் 9:42) என இயேசு கற்பிக்கின்றார். கை, கால், கண் போன்ற உடல் உறுப்புக்களை இழந்தாலும் கூட நாம் பாவம் செய்வதைத் தவிர்க்க வேண்டும் என இயேசு கூறுகின்றார். பாவம் என்பது நம்மைக் கடவுளிடமிருந்து பிரிக்கின்ற தீய சக்தியாக இருப்பதால் அதை நாம் கண்டிப்பாக தவிர்க்கவேண்டும் என இயேசு நமக்கு அறிவுரை கூறுகின்றார். பாவம் செய்தால் கடவுள் நம்மைத் தண்டிப்பார் என்னும் கருத்து விவிலியத்தில் உள்ளது. ஆனால் கடவுள் நம்மை அன்பு செய்கின்றார் என்பதால் நாம் அவரை அன்பு செய்ய அழைக்கப்படுகின்றோம்.